## 100. ஸ்தோத்திர பலி செலுத்தி

### பல்லவி

ஸ்தோத்திர பலி செலுத்தி
கர்த்தரின் நாமத்தை தொழுதிடுவேன்
அவர் செய்த நன்மைகளுக்கு
என்னத்தை செலுத்திடுவேன்

### சரணங்கள்

1. கர்த்தர் என் சத்தத்தை கேட்டார் - எந்தன்
விண்ணப்பத்தையும் கேட்டார்
எனக்கு பதில் கொடுத்ததால் - அவரை
போற்றி பாடிடுவேன்
- ஸ்தோத்திர பலி

2. மரண கட்டுகள் சுற்றி கொண்டது
பாதாள இடுக்கண்கள் சூழ்ந்து கொண்டது
கர்த்தரை நோக்கி கூப்பிட்டேன்
என்னையும் விடுவித்தாரே
- ஸ்தோத்திர பலி

3. என் ஆத்தும மரணத்திற்கும் - எந்தன்
கண்கள் கண்ணீருக்கும்
எந்தன் கால்களை இடறலுக்கும்
தப்புவித்த கர்த்தாவே
- ஸ்தோத்திர பலி